**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2021**
**வழக்கு சாட்சி PW–13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. ஷியாம்சுந்தர் சிங் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நாயகம் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 22nd, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உறைவிட மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018ம் வருடம், எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்த மருத்துவர்.கோகிலாலட்சுமி என்பவர் தற்போது இறந்து விட்டார். அவர் பதிவு செய்து வைத்திருந்த விபத்து பதிவேட்டை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.09.2018 அன்று மாலை 04.15 மணியளவில் மருத்துவர். கோகிலாலட்சுமி மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, ராமகிருஷ்ணன் என்ற 23 வயது ஆண் நபர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தபோது அவரை 01.09.2018ம் தேதி, பிற்பகல் 02.30 மணியளவில் ஆலங்குளம் அருகேயுள்ள குத்தபாஞ்சான் என்ற இடத்தில் இனம் தெரிந்த ஒரு நபர் அரிவாளால் தாக்கியதாக கூறியுள்ளார். அவரை மருத்துவர்.கோகிலாலட்சுமி அவர்கள் பரிசோதித்து பார்த்தபோது, அவருக்கு இடதுகை துண்டிக்கப்பட்டு காணப்பட்டது.

அவர் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். துண்டிக்கப்பட்ட கையின் பகுதியை ஐஸ் பேக்கில் வைத்து கொண்டு வந்திருந்தார். அவருக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆகும். அவரை அரிவாளால் தாக்கும் போது அந்த காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

விபத்து பதிவேட்டில் நோயாளி தனக்கு தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நோயாளியின் பெயர் என்ற இடத்தில் இராதாகிருஷ்ணன் என்று எழுதப்பட்டு திருத்தம் செய்யப்பட்டு இராமகிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மருத்துவரின் சுருக்கொப்பம் உள்ளது. காயம்பட்டவர் மாலை 05.00 மணிக்கு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Nachiyar, Assistant, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:25:44 +0530